# அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை சேமித்து விற்கவும்

- 30.03.2015

இந்தியாவில் சின்ன வெங்காய உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இந்தியாவில், மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில், தமிழ்நாடு 90 சதவீதம் பங்களிக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து சின்ன வெங்காயம் இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தற்போது திண்டுக்கல், திருச்சி மற்றும் மதுரை சந்தைகளில் சின்ன வெங்காய வரத்து அதிகரித்து காணப்படுகிறது. பொதுவாக பிப்ரவரி – ஏப்ரல் மாதங்களில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களில் அறுவடை ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்படுகிறது. அதனால், தமிழ்நாட்டில் விவசாயிகளின் பண்ணை கொள்முதல் விலை மேற்கண்ட மாதங்களில் குறைந்து காணப்படுகிறது. தற்போது முக்கிய சின்ன வெங்காய சந்தைகளில் மைசூர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேலும், அடுத்த மாதம் வரை தொடர்ந்து வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவும் மிகவும் உகந்த பருவநிலையால் தரம் மிகுந்த சின்ன வெங்காய வரத்து காணப்படுகிறது.

தமிழ்நாட்டில், உற்பத்தி மையங்களிலிருந்து சந்தைகளுக்கு தொடர் வரத்து காணப்படுகிறது. ஏற்றுமதி சந்தையை பொருத்தமட்டில், உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு இலங்கை அரசு இறக்குமதி வரியை அதிகரித்து இந்தியாவின் ஏற்றுமதியை குறைத்துள்ளது. தற்சமயம் நல்ல தரமான சின்ன வெங்காயம், விலை கிலோவிற்கு ரூ.14 -19 வரை திண்டுக்கல் சந்தையில் விற்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக  கடந்த 17 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலை ஏப்ரல் - மே, 2015 மாதங்களில் கிலோவிற்கு ரூ.22 முதல் ரூ.25 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் இறக்குமதி வரி குறைந்து, இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும் பட்சத்தில் சின்ன வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து அடுத்து வரும் மே - ஜூன், 2015ல் விற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி -0422-2431405


**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003,
தொலைபேசி எண் - 0422-6611374, 0422-6611283